# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# அறிவிப்புகள்

# 2015–2016



## முக்கூர் என். சுப்பிரமணியன்

**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

## 1. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் “அரசு இ–சேவை மையங்கள்” ஏற்படுத்துதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 6,461** கிராம ஊராட்சிகளில், தற்போது இயங்கி வரும் அரசு இ–சேவை மையங்களுடன், கூடுதலாக **6,063** கிராம ஊராட்சிகளில் இச்சேவை மையங்கள் அமைக்கப்படும். இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து **12,524** கிராம ஊராட்சிகளிலும் அரசு இ–சேவை மையங்கள் செயல்படும்.

**2. ஒருங்கிணைந்த பணிப்போக்கு மற்றும் ஆவண மேலாண்மை அமைப்பு (Integrated Workflow and Document Management System — IWDMS)**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அரசு நிர்வாகத்தில், பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்த **ஒருங்கிணைந்த பணிப்போக்கு மற்றும் ஆவண மேலாண்மை அமைப்பு ரூபாய் ஒரு கோடி** செலவில் செயல்படுத்தப்படும்.



**3) தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் புதிய தமிழ் மென்பொருள்கள் உருவாக்குதல்**

- தமிழ் மொழித் தொழில்நுட்பம் சார்ந்த பல்வேறு மொழி ஆய்வு மென்பொருள்கள்,
- உலகெங்கும் வாழும் தமிழர்க்கு பயனளிக்கும் வகையில் உலகத்தரத்திலான மதிப்பீட்டுக் கருவிகள்,
- முழுமையான கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான மேலாண்மைத் தளம்,
- அரிய தமிழ் நூல்கள், ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள், ஓவியங்கள் ஆகியவற்றின் மின்னுருவாக்கம்,

- தமிழ் மொழியியல் தரவகம் மற்றும் மின்–அகராதி,
- கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசியில் தமிழ்ப்பாடங்கள், இலக்கணம் மற்றும் அகராதி ஆகியவற்றை கற்பிப்பதற்கான குறுஞ்செயலிகள்

– ஆகியவற்றை உருவாக்கிச் செயல்படுத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூபாய் 2.5 கோடி** ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
**தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர்**